# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,092 — 1960 මාර්තු 25 වැනි සිකුරාදා — 25.3.1960

12,092 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 279 |

| | பக்கம் |
|---|---|
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| வரவு செலவுத் திரட்டுகள் .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 280 |
| மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

எனது இல. ஈபி/ஆர்/4/59.

பதுளை நிர்வாக மாவட்டத்தின் கீழுள்ள அப்புத்தளை, உடுகின்ட, பிரிவுகளின் திருத்தியமைக்கப்பட்ட பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுப்பகுதிகளாவன:—

பதுளை நிர்வாக மாவட்டத்தின் கீழுள்ள பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுப்பகுதிகளை 1.1.1960 ம் தேதி தொடக்கமாகத் திருத்தியமைக்கப்பட்டதன் விளைவாக ஊவா மாகாணம் இணைப் பிரிவுகளாகிய பதுளைப் பிரிவாகவும், மொனருகலைப் பிரிவாகவும் ஏற்பட்டமை பற்றி இத்தால் பொதுமக்களுக்கறியத் தருவதாவது : பதுளை மாவட்டத்தில் புதிதாய் அமையப்பெற்ற அப்புத்தளைப் பிரிவும், திருத்தியமைக்கப்பட்ட உடுகின்டப் பிரிவும் கீழ்க்காட்டியவாறு அமையப்பெறும் :—

(1) (அ) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுப்பெயர்— அப்புத்தளை.

(ஆ) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் காரியாலய அமைவிடம்—ஹால்டுமுல்லை.

(இ) கிராமத்தலைமைக்காரர்களின் பிரிவுப்பகுதிப் பெயர்களாவன :—

| | |
|---|---|
| கடுறுகமுவா<br>அப்புத்தளைகம்<br>கஹகொல்ல<br>கபில்லவெல்ல<br>கனிகம<br>கொறண்டியகும்புறவும்<br>பண்டாரவளைப் பட்டினமுமாம் | மகாபலாத்த கோறளையைச் சேர்ந்தது |
| கம்பகா<br>நிக்கலபொத்தா<br>கொஸ்லன்ட<br>கிரிவனகம<br>ஹாருகுனே<br>ஹல்டுமுல்ல<br>கலுபகன்ன | கண்டபாலே கோறளையைச் சேர்ந்தது |

(ஈ) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுக்குள் அமையும் நீதிவான், கிராமக்கோட்டு முதலியனவின் ஆட்சி எல்லைக்குரிய பகுதிகளாவன :—

பதுளை நீதிவான் கோடும், ஹல்டுமுல்ல நீதிவான் கோடும், பண்டாரவளை கிராமக் கோடும், ஹல்டுமுல்ல கிராமக்கோடுகளுமாம்.

(உ) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுப்பகுதி, கீழ் காட்டும் கிராமச்சங்க எல்லைகளுக்குள் அமையும் :—
கண்டப்பல்ல, கிராமச் சங்கம் இல. 1
கண்டப்பல்ல கிராமச் சங்க இல. 2
மகாபலாத்த கிராமச் சங்கம்

(ஊ) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுப்பகுதி கீழ் காட்டும் தேர்தல் மாவட்டத்துள் அமையும் :
127 ம் இலக்கம் கொண்ட பண்டாரவளைத் தேர்தல் மாவட்டமும்;
128 ம் இலக்கம் கொண்ட அப்புத்தளைத் தேர்தல் மாவட்டமுமாம்.

(2) (அ) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுப்பெயர்— உடுகின்ட.

(ஆ) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் காரியாலய அமைவிடம், வெளிமடை.

(இ) கிராமத்தலைமைக்காரர்களின் பிரிவுப் பகுதிப் பெயர்களாவன :

| | |
|---|---|
| மஸ்பன்ன<br>வெற்றலவ<br>வெலிகம<br>பம்பறபன்னே<br>துப்பிற்றிய | கம்பளைக் கோறளையைச் சேர்ந்தது |
| கிறிவங்கம்<br>ஹப்புகொல<br>பறனகம<br>உடுகவற | மெடபலாத்த கோறளையைச் சேர்ந்தது — |
| குமரபட்டிய<br>பெறவெல்ல<br>உமா எல்ல | யற்றிபலாத்த கோறளையைச் சேர்ந்தது |
| டெஹிப்பொல<br>உவிடுறுபொல<br>பலுகம<br>அம்பெவல<br>தெள்ளகோள்வல<br>பலுகம-பட்டினம்<br>தெனகும்புற<br>நெடுங்கமுவ | உடபலாத்த கோறளையைச் சேர்ந்தது |
| கெட்டவெற<br>உடயெறுவ<br>எற்றம்பிற்றிய<br>டெகிவின்ன<br>மலித்த | தெகிவினிபலாத்த கோறளையைச் சேர்ந்தது |
| டிக்கபிற்றிய<br>கெற்றகெல<br>மிறகவத்தை<br>மல்பொத்த<br>குருத்தலாவ<br>நற்கறவ்வ<br>ஒகிய<br>பொறலன்ட | டம்பவினிபலாத்தயைச் சேர்ந்தது |

(ச) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுக்குள் அமையும் நீதிவான் கிராமக்கோடு முதலியனவின் ஆட்சி எல்லைக்குரிய பகுதிகளாவன :—

பதுளை–ஹல்டுமுல்லை நீதிவான் கோடும், வெளிமடை கிராமக் கோடும், துப்பிட்டியா கிராமக்கோடுமாம்.

(உ) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுப்பகுதி கீழ் காட்டும் கிராமச் சங்க, பட்டினசங்க எல்லைகளுக்குள் அமையும் :

வெளிமடை பட்டின சங்கம்
மெடபலாத்தா கிராமச் சங்கம்
யற்றிபலாத்தா கிராமச் சங்கம்
உடபலாத்தா கிராமச் சங்கம்
தெகிவினிபலாத்தா கிராமச் சங்கம்
கம்பகா கிராமச் சங்கம்
டம்பவினிபலாத்தா கிராமச் சங்கம்

(ஊ) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுப் பகுதி கீழ்க் காட்டும் தேர்தல் மாவட்டத்துள் அமையும் :—

125 ம் இலக்கங்கொண்ட ஊவாபறனகம தேர்தல் மாவட்டமும்

126 ம் இலக்கங்கொண்ட வெளிமடைத்தேர்தல் மாவட்டமுமாம்.

எஸ். சீ. பெர்ணுண்டோ,
நிரந்தரக் காரியதரிசி.

உள்நாட்டு அமைச்சு,
டொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7,
1960 ம் ஆண்டு மார்ச்சு மீ 14 ந் வ.

# அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள்

**பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை—பாடசாலைப் புத்தகங்கள் தொடர்பாக அளிக்கப்பட்ட அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்**

1955 ம் ஆண்டு பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபையால் வெளியிடப்பட்ட 3 ம் பாடப்புத்தக உபதொகுதியிலுள்ள புத்தகங்கள் தொடர்பில் அளிக்கப்பட்ட அங்கீகாரங்களும் 1957 ம் ஆண்டு வெளியிடப்பட்ட 5 ம் பாடப்புத்தக உபதொகுதியில் அங்கீகாரங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட புத்தகங்களின் அங்கீகாரங்களும் 1960 ம் ஆண்டு இறுதியில் முடிவுறும்.

குறிக்கப்பட்ட புத்தகங்கள் பாடசாலைகளில் மேலும் உபயோகிப்பதற்கு சீர்தூக்கப்படல் வேண்டுமென விரும்பும் நூலாசிரியர்களும், பிரசுரிப்பாளர்களும் அப்புத்தகங்கள் தொடர்பில் அங்கீகாரத்தைப் புதுப்பித்தற்கு 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 30 ம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பிக்க வேண்டும்.

அடுத்து வரும் பாடப்புத்தக உபதொகுதியை 1960 ம் ஆண்டு நவெம்பர் மாதம் வெளியிடுவதற்கு கருதியிருப்பதால் புதிதாக அங்கீகாரத்திற்கு அனுப்பவேண்டியிருக்கும் பாடப்புத்தகங்களை 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் சீர்தூக்கலுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

குணபால சேனடீரு,
காரியதரிசி,
பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை.

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை,
மலாய் வீதி, கொழும்பு 2,
1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15 ம் திகதி.

---

**இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி**

**புகையிரதக் கடவைத் திருத்தங்கள்**

கழனிப் பள்ளத்தாக்குப் புகையிரத வீதியில் பன்னிப்பிட்டிய, மாலபல ஆகிய புகையிரத நிலையங்களுக்கிடையில் 10 மைல், 53 சங்கிலியில் குறுக்கிடும் பன்னிப்பிட்டிய பெற்றல்ல வீதியிலுள்ள புகையிரதக்கடவை திருத்துவதற்காக மேற்படி வீதி 26.3.60 சனிக்கிழமை பிற்பகல் 6 மணிதொடக்கம் 9 மணிவரை ஒரு பகுதி வாகனப் போக்குவரத்திற்கு மூடப்பட்டுப் பின்னர் 26.3.60 சனிக்கிழமை மாலை 9 மணி தொடக்கம் 27.3.60 ஞாயிற்றுக்கிழமை காலை 7. மணி வரை முழுவதும் வாகனப் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும்.

மேல் குறிப்பிட்ட முழுவதும் மூடப்பட்டிருக்கும் காலத்தில் வாகனப் போக்குவரத்து யாவும் மகரகமப் பழைய வீதியாலும், மஸ்கெட்டியச் சந்தியாலும் நடைபெறலாம்.

---

**இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி**

**புகையிரதக் கடவைத் திருத்தங்கள்**

வடபகுதிப் புகையிரதப் பாதையில் மீசாலை, சாவகச்சேரி ஆகிய புகையிரத நிலையங்களுக்கிடையில் 235 மைல், 21 சங்கிலியில் குறுக்கிடும் சாவகச்சேரி–கச்சாய் வீதியிலுள்ள புகையிரதக் கடவை திருத்துவதற்காக மேற்படி வீதி 27.3.60 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை வாகனப்போக்குவரத்திற்கு ஒரு பகுதி மூடப்பட்டிருக்கும்.

மேல் குறிப்பிட்ட காலத்தில் வாகனப் போக்குவரத்து யாவும் இவ்வீதியால் நடைபெறலாம்.

## விளம்பரம்

1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 13 ந் திகதி புதன்கிழமையும், 15 ந் திகதி வெள்ளிக் கிழமையும் அரசாங்க விடுமுறை நாட்களாகவிருப்பதால், 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதத்தின் மூன்றும் வாரத்திற்குரிய இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 14 ந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 8 ந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆண்டு பங்குனி (மார்ச்சு) மாதம் 15 ந் திகதி.

பேர்ணுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது